விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 208 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 31 செவ்வாய்க்கிழமை (15.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துக

## இந்திய உயர்ஸ்தானிகரிடம் கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர்

(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் நேரில் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)



செப்ரெம்பர் முதல்

## ஒன்லைன் ஊடாக அபராதம் செலுத்தலாம்

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் நாடு முழுவதும் ஒன்லைன் ஊடாக நேரடியாக அபராதம் செலுத்தும் வசதி செயற்படுத்தப்படும் என்று இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிலையப் பணிப்பாளர் சபை உறுப்பினர் 15ஆம் பக்கம் பார்க்க

## கம்பஹாவில் 'துரியன்' பறிக்கச் சென்றவர் சுட்டுக்கொலை

(கம்பஹா)

கம்பஹா மீரிகமவில் துரியன் பழம் (முள்நாறி) பறிக்கச் சென்ற ஒருவர் நேற்று சுட்டுக் கொல லப்பட்டுள்ளார்.

மீரிகம, ஏக்கர் 20 பகுதி 15ஆம் பக்கம் பார்க்க

வட மத்திய மாகாண சபைக்கு

## முதல் முறையாக தமிழ்ப் பெண் செயலாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

வட மத்திய மாகாண சபைக்கு முதல் முறையாக தமிழ்ப் பெண் ஒருவர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை 15ஆம் பக்கம் பார்க்க



பிரான்ஸிலிருந்து வருகை தந்தவர்

## மயிலிட்டி வடக்கில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸில் இருந்து வருகைதந்து மயிலிட்டியில் தங்கியிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரியில் வெடிபொருள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர்ப் பகுதியை அண்மித்துள்ள தனியார் காணி ஒன்றில் 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி

### கொழும்பில் இன்று கவனயீர்ப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரி கொழும்பில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.வலிகாமம் வடக்கு காணி 15ஆம் பக்கம் பார்க்க

## நடைபாதைக் கடைகள் அகற்றம்

### வவுனியாவில் மாநகர சபையினர் – வியாபாரிகளிடையே முறுகல்



(வவுனியா)

வவுனியாவில் நடைபாதைக் கடைகளை அகற்றும் நடவடிக்கையின்போது, வியாபாரிகள் மற்றும் மாநகர சபை ஊழியர்கள் இடையே கடுமையான முரண்பாடுகள் 15ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி துரைசிங்கம் மகிழாம்பிகை

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்–ஆறுமுக வித்தியாசாலை சுழிபுரம்)



பிறப்பு 08.06.1955 இறப்பு 11.07.2025

பறாளாய் வீதி சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் மகிழாம்பிகை அவர்கள் கடந்த (11.07.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை (செட்டி வாத்தியார்) - இலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியினரின் பாசமிகு மருமகளும் துரைசிங்கம் (அச்சண்ணை-ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் - தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தர்மதாசன், சுபத்திரா, தனபாலசிங்கம் (சுவிஸ்), கந்தராசா, பாலச்சந்திரன் (யாழ்.மாநகரசபை), இராஜராஜேஸ்வரி (ஜேர்மனி), மனோன்மணி ஆகியோரின் சகோதரியும் சற்குணானந்தன், வசந்தநாயகி (சுவிஸ்), தர்மினி, வளர்மதி (ஆசிரியர் - யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை), மகேந்திரநாதன் (ஜேர்மனி), சிவகுமார் (ஆசிரியர் -மகாஜனாக்கல்லூரி தெல்லிப்பழை) காலஞ்சென்றவர்களான பகவதி - கனகசுந்தரம், காலஞ்சென்றவர்களான புஸ்பராஜா -செல்லப்பாக்கியம், விநாயகமூர்த்தி - வசந்தயோகம் (ரூபி - GIT Institute Director Colombo-6) இராஜேஸ்வரி - விஜயராகவன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் கஜரூபன் (ஆசிரியமாணவன்-வவுனியா தேசிய கல்வியற்கல்லூரி), சுகன்யா (உருகுணைப்பல்கலைக்கழகம்), மதுஷன் (ஜேர்மனி), மிதுனன் (ஜேர்மனி), கிருசான் ஆகியோரின் பெரியம்மாவும் மாருதன் (சுவிஸ்), சாருஜன் (சுவிஸ்), சர்வினா, கிருசாந்தி (ஆசிரியர் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமியும் சுதாகர் (கணக்காளர் - இ.போ.ச தலைமைக்காரியாலயம்) - பத்மாசினி (மொழிபெயர்ப்பாளர் - சுகாதார அமைச்சு), சுதா (சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்) - கலாநிதி சிறீதரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்), திலீபன் (கனடா) - கௌரி (கனடா), Dr. ஜனகன் (IDMNC International chairman) - சாலினி (வைத்தியர்), சர்மிலா (லண்டன்) - செந்தூரன் (லண்டன்), பொன்னப்பெருமாள் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சமநல சேவை நிலையம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
க.துரைசிங்கம் - 077 538 5603

(4794)


# வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

சம்பளம் ஆண் : 60 000 - 70 000
பெண் : 45 000

(4798)

077 354 9140

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# சைவ வித்தியா விருத்திச் சங்கம்

உடனடி வேலைவாய்ப்பு

**முகாமையாளர் -பெண்**

எமது சங்க நிர்வாகத்தின் கீழ் உள்ள பெண்கள் இல்லத்திற்கான இல்ல முகாமையாளர் பதவிக்காகத் தகுதியுள்ள அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் / அனுகூலங்கள்**

- வயதெல்லை : 30 - 55
- துறைசார்ந்த முன்னனுபவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- கணினி பயன்பாட்டு திறன் கொண்டிருத்தல்.
- தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
- கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி அல்லது அதற்கு மேற்பட்டது.

உங்கள் சுய விபரக்கோவையினை 21.07.2025இற்கு முன்பதாகத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.


த.தவரூபன்
செயலாளர்

(C-3413)

தொலைபேசி : 021 222 6525, 076 300 4877


# மரண அறிவித்தல்

தோற்றம் 28 - 08 - 1946



மறைவு 11 - 07 - 2025

## செல்வத்தம்பி தர்மராசா

பருத்தித்துறை புலோலி கிழக்கு கணையந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் தும்பளை நெல்லண்டை மற்றும் நெதர்லாந்து சைஸ்ற் ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்வத்தம்பி தர்மராசா அவர்கள் கடந்த (11.07.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வழக்கறிஞர் செல்வத்தம்பி - காந்திமதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாலசுந்தரம் - புவனேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் பர்வதபத்தினி அவர்களின் அன்புக் கணவரும் மதியழகன்(லண்டன்), ஆதித்தன்(நெதர்லாந்து), குமுதினி(நெதர்லாந்து), சிறினிவாசன்(நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுசா, ஸ்ரீகிருசாந்தி, ஷாம்நாத், சுதர்சினி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர், சிறிஸ்கந்தராசா (UK),காலஞ்சென்ற பத்மாவதி, நவரத்தினராசா (கனடா), ஆனந்தநடராசா, குலராசா (அவுஸ்திரேலியா), துரைராசா, கணேசராசா (USA) ஆகியோரின் சகோதரரும் வர்ஷினி, கார்த்திகா, ஆருஜன், கார்த்திக், கௌசிக், ஆர்த்தி, அனுஷ், அவனேஷ், ஓவியா, அகிலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16.07.2025 புதன்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


நெல்லண்டை வீதி,
தும்பளை.

தகவல் : குடும்பத்தினர்
077 850 9910

(4803)

# மரண அறிவித்தல்

## தவவிநாயகம் சந்திரகுமார்
## (Kumar Shop – நிறுவன உரிமையாளர்)



தோற்றம் 14.11.1954 மறைவு 08.07.2025

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தொழிலதிபர் திரு. தவவிநாயகம் சந்திரகுமார் (குமார்ஸ் சொப், சிங்கப்பூர் எக்சேஞ்ச் உரிமையாளர்) அவர்கள் 08.07.2025 செவ்வாய்க்கிழமை அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லத்துரை உடையார் (அல்லைப்பிட்டி) சொர்ணம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தவவிநாயகம் (கிராம தலைமைக்காரன், கிராம சபைத் தலைவர் அல்லைப்பிட்டி கிருஷ்ணாம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சிவபாக்கியம் (அல்லைப்பிட்டி) தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி. தயாநாயகி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும் கிருஷாந், சிவப்பிரகாஷ், வித்தியாபதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராயிசா, பத்மஸ்ரீ, அருள்மீரா ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருபாலினி (பிரான்ஸ்), சூரியகுமார் (சூர்யா ஜூவல்ஸ் - லண்டன்), தவபாலனி (பிரான்ஸ்), ஜெயபாலினி (லண்டன்), குணபாலினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உருத்திரகுமார், சத்தியபாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தொழிலதிபர் இந்திரஜித், பரமேஸ்வரி (லண்டன்), சிவநேசராஜா (பிரான்ஸ்), இரவீந்திரன் (ஆசிரியர் - லண்டன்), ஜெயசீலன் (பிரான்ஸ்), கஜவல்லி (லண்டன்), சிவானந்தன் (லண்டன்), தனலெட்சுமி (யாழ்ப்பாணம்), விஜயலெட்சுமி (அல்லைப்பிட்டி), கோபாலகிருஷ்ணன் (கொழும்பு), வசந்தமல்லிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான விநாயகரட்ணம், இராஜரட்ணம், மாலினி (கொழும்பு), சிவநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் றிஸ்னா, றித்திக், சச்சின், அனன்யா, ஹரிஸ், றிஸ்வா, காவியா, ரிஷி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09.07.2025 தொடக்கம் அவரது இல்லத்தில் **(7 Av de la Reunion, 93600 Aulnay-sous-Bois)** பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் இன்று (15.07.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலை 6 மணி தொடக்கம் காலை 10 மணி வரை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக **(Crématorium des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse)** எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 1.15 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"குமார் ஹவுஸ்"
(தவகிருஸ்பவன்)
2ம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

த.சூரியகுமார் : +44 795 65 09035
ச.கிருஷாந்தன் : +33 620 85 6419
ச.சிவப்பிரகாஷ் : +44 794 6504 997
ச.வித்தியாபதி : +33 651 85 0460

தகவல் :
அல்லைப்பிட்டி
செல்லத்துரை
உடையார் குடும்பம்

(4793)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு 5,000 ரூபா உதவித் தொகை வழங்கும் திட்டம்

## இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

**நிறுவனப் பராமரிப்பு, பாதுகாவலரின் கீழ் உள்ள குழந்தைகள் மற்றும் வீதியோரக் குழந்தைகளுக்கு 5,000 ரூபா உதவித்தொகை வழங்கும் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த 5,000 ரூபா கொடுப்பனவு நாடு முழுவதும் உள்ள 306 குழந்தை அபிவிருத்தி நிலையங்களில் வசிக்கும் 9,191 குழந்தைகளுக்கு பயனளிக்கும்.

குழந்தைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகளில் 3,000 ரூபா குழந்தைகளை பொறுப்பேற்றுள்ள நிறுவனங்களின் பராமரிப்பிற்காக வழங்கப்படும்.

2,000 ரூபா "அர்த" என்ற குழந்தையின் கணக்கில் வரவு வைக்கப்படும். அவர்களுக்கு 18 வயது பூர்த்தியாகும் போது எதிர்கால நடவடிக்கைகளுக்காக இந்த 2,000 ரூபா பணம் அவர்களுக்கு பயனளிக்கும்.

இந்த திட்டத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் இருந்து 1,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

# சா/த பெறுபேறுகள் மீள் பரிசீலனை

## 28 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் 28 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி, 237,026 மாணவர்கள் உயர்தரக் கல்விக்கு தகுதி பெற்றுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தெரிவித்துள்ளார்.

இது சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 73.45% என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன், 13,392 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் 9A சித்திகளை பெற்றுள்ளதாகவும் இது மொத்தப் பரீட்சார்த்திகளில் 4.15% என பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (நி)

# ஓய்வு பெறவுள்ள பிரதம நீதியரசர் முர்து

(கொழும்பு)

பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ இந்த மாத இறுதியில் ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவர் எதிர்வரும் 27 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய முர்து பெர்னாண்டோ, கடந்த 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையின் 48 ஆவது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

இந்தநிலையில், அவரது ஓய்வை அடுத்து, இலங்கை அரசியலமைப்பு சபையின் அனுமதியுடன், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி பிரதம நீதியரசருக்கான பரிந்துரையை முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் போக்குவரத்து சேவை

## துறைமுக சீரமைப்பு பணிகள் ஆரம்பம்

(சென்னை)

இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க, தமிழக மாநில அரசின் சிறு துறைமுகங்கள் திணைக்களம் ஊடாக 118 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இராமேஸ்வரம் துறைமுகத்தை சீரமைக்க, 6.24 கோடி ரூபாயில் மத்திய அரசின் ஊடாக பணிகள் நடந்து வருவதாகத் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், மத்திய அரசாங்கத்திடம் இருந்து இன்னும் சேவைக்கான அனுமதி கிடைக்கவில்லை. அதே நேரம், தலைமன்னாரிலும் கப்பல் சேவைக்கான ஆயத்தப் பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என தமிழக அரச தரப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன. (நி)

# வரியைக் குறைக்கும் நோக்கில் அமெரிக்கா நோக்கி செல்லும் குழு

(கொழும்பு)


இலங்கை ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள 30 சதவீத வரியைக் குறைக்கும் நோக்கத்தை மையப்படுத்தி, இலங்கையின் உயர்மட்டக் குழு ஒன்று அமெரிக்காவுக்குப் புறப்படவுள்ளது.

முக்கிய அரச அதிகாரிகள் மற்றும் பொருளாதார நிபுணர்களை உள்ளடக்கிய இந்தக்குழு எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் நாட்டிலிருந்து புறப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கும், அமெரிக்கச் சந்தைக்கு செல்லும் இலங்கைப் பொருட்களுக்கு மிகவும் சாதகமான விதிமுறைகளைக் கொண்டு வருவதற்குமான, இராஜதந்திர முயற்சியின் ஒரு பகுதியாக இந்தப் பயணம் அமைகிறது. மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் விமலேந்திரராஜா, சிரேஷ்ட ஜனாதிபதி ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன், அமெரிக்க வரி நிவாரணத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழுவின் உறுப்பினர்களும் இந்தக் குழுவில் அடங்குகின்றனர். (நி)


11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 04 - 1947

மறைவு 17 - 06 - 2014

அமரர். சிற்றம்பலம் சின்னத்தம்பி

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

திதி:15.07.2025

பதினொரு ஆண்டுகள் கடந்தனவோ
இப் பாரினில் நீங்களின்றி!
வேரினில் கசியும் நீராய் ~ நீவீர்
ஈர நினைவுகள் எம் காரிருள் அகற்றி
நேரினில் வழி நடத்தும்...
நிலம் வியக்க இங்கு
நிறை வாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும்
ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை
உங்கள் நினைவிருக்கும்.


(4802)

வாணி

தகவல்- குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாவற்குழி திருவாசக அரண்மனை வளாகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சிவபூமி திருவாசக அரங்கம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த வைத்திய நிபுணர் மனோமோகன் சிவகௌரி தம்பதிகள் அரங்கத்தைத் திறந்து வைத்தனர். சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில், விருந்தினர்கள், கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். வைத்திய கலாநிதி.சிவகௌரி மனோமோகன் அவர்கள் தனது பெற்றோர்களான வைத்திய கலாநிதி த.சண்முகநாதன்(முன்னாள் பணிப்பாளர் யாழ் போதனா வைத்தியசாலை) அருந்ததி நினைவாக சிவபூமி திருவாசக அரங்கம் அமையப் பெற்றுள்ளது. (ம-7)

## இந்திய மீனவர்.......

கடற்தொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்று கடற்தொழில் அமைச்சில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் மீனவர் நலன், கடல்வளப் பாதுகாப்பு, கடற்தொழில் துறை அபிவிருத்தி மற்றும் இருதரப்பு ஒத்துழைப்புக்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மீனவர்கள் கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்திற்குப் பிறகு பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வருவதாகவும், அவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சந்திரசேகர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், தமிழ்நாட்டு மீனவர்களின் சட்டவிரோத 'Bottom trawling' மீன்பிடிப் படகுகளால் கடல்வளம் பெரிதும் பாதிக்கப்படுவதால், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, 'Bottom trawling' மீன்பிடி முறை தமிழ்நாட்டிலும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட ஊக்குவித்து வருவதாகவும் தெரிவித்தார்.

கடற்தொழில்துறை அபிவிருத்தி குறித்துப் பேசிய அமைச்சர் சந்திரசேகர், வடக்கு மற்றும் கிழக்கில் மீனவத் துறைமுகங்கள் இல்லை எனவும் பேசாலை, குருநகர் மற்றும் பருத்தித்துறை போன்ற இடங்களில் அதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான படகு வசதிகளும், களஞ்சிய வசதிகளும் வடக்கு மீனவர்களிடம் இல்லை என்பதையும், ஒன்றிரண்டு சிறிய படகுத்துறைகளை அமைக்க சர்வதேச உதவிகளையும் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

மீனவத்துறை சார்ந்த அபிவிருத்திகளுக்கு ஒத்துழைப்பு நல்குவது குறித்து சாதகமான பதிலை வழங்கிய இந்திய உயர்ஸ்தானிகர், விரைவாக இந்திய உதவியில் பருத்தித்துறை மீனவத்துறைமுகப் பணிகளை ஆரம்பிப்பது குறித்த ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

அத்துடன் நாகப்பட்டினம்- காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை போன்று தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது குறித்தும் காங்கேசன்துறை துறைமுகத்தை நவீன மயமாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாராகிவிட்டதாகவும் விரைவாக சரக்குச் சேவைகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இந்திய உயர்ஸ்தானிகர் கேட்டறிந்தார். (ம-7)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் (ஜெயா)
### (பிரபல வர்த்தகர், தொழிலதிபர் – பிரான்ஸ்)

**தோற்றம்** 13.02.1971 — **மறைவு** 14.07.2025

யாழ்ப்பாணம் மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகரும் தொழிலதிபருமான சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் அவர்கள் நேற்று (14.07.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தங்கரத்தினம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சுப்பையா - கனகபூஷணம் தம்பதியரின் அன்பு மருமகனும் சூரியகலா (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும் திவ்வியா (பிரான்ஸ்), சௌமியா (பிரான்ஸ்), ஜீவேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சன், சயந்தன் (ஓய்வு நிலை பிரதி அதிபர் - யா/அருணோதயா கல்லூரி), ஜெயந்தன் (ஆசிரியர் - யா/அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகம்பாள், சந்திரகுமார் (பிரான்ஸ்), ஞானாம்பாள் (சுவிஸ்), காலஞ்சென்ற சந்திரகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.07.2025) செவ்வாய்க்கிழமை அன்னாரின் சொந்த இடமான மயிலிட்டியில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளுக்காக அவரது வாழ்விடமான பிரான்ஸ் நாட்டிற்கு மாலை 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 794 6412
077 [illegible] 6518

தகவல் :
குடும்பத்தினர்

(1329)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான (24.07.2025) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்க்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களைப் பதிவு செய்தல்

**1. தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்**

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 18.07.2025 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பகிரங்க ஏலம் 21.07.2025ஆம் திகதியன்று (திங்கட்கிழமை) முற்பகல் 9.30 மணிக்கு கீரிமலை பேரூந்து நிலைய முன்றலில் நடைபெறும்.

**குறிப்பு:**

- சித்திபெற்ற கேள்விதாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தினையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்துக்குப் பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

**2. பிதிர்க்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் பதிவு செய்தல்**

பிதிர்க்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் 21.07.2025ஆம் திகதி மு.ப 11.00மணி தொடக்கம் பி.ப 3.00மணி வரையும் 22.07.2025ஆம் திகதி மு.ப 9.00மணி தொடக்கம் பி.ப 3.00மணி வரையான காலப்பகுதியில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீரிமலை புனித தீர்த்தக்கரை அலுவலகத்தில் படிவ கட்டணமாக ரூபா200.00 உம் இடவரிக் கட்டணம் ரூபா3000.00 இனை செலுத்தி தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- பதிவுகள் மேற்கொள்ள வரும் சிவாச்சாரியார்கள் தங்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட சிவாச்சாரிய அடையாள அட்டை சமர்ப்பிப்பது கட்டாயமானது.
- மேலும் எம்மிடம் பதிவுகள் மேற்கொள்ளாத சிவாச்சாரியார்கள் ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித பிரதேசத்தில் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**சோ.சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**021 224 4180.** (C-3412) **15.07.2025**

## ஆடிப்பிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின் கலை மன்றம் முன்னெடுக்கும் ஆடிப்பிறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறும் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் பழைய மாணவியும் கலைக் கோயில் நாட்டிய பள்ளியின் இயக்குனருமாகிய கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமாரும் அதிதி பேச்சாளராக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடப் பத்திராதிபர் ஜீவா. சஜீவனும் கலந்து கொள்வர். (8-33)

## மரண அறிவித்தல்

**அமரர்.திருமதி. தங்கேஸ்வரி இராஜதுரை**

தோற்றம்
*24 . 06 . 1946*



மறைவு
*13 . 07 . 2025*

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கேஸ்வரி இராஜதுரை அவர்கள் 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்தார். அன்னார் சிவசம்பு - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், தம்பிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், திரு.தம்பிப்பிள்ளை இராஜதுரை (ஓய்வுநிலை முகாமையாளர் மக்கள்வங்கி) அவர்களின் பாசமிகு மனைவியும், சிறீதரன், மதிவண்ணன், சுபாஸ்கரன், முரளிதரன், சுபாசினி அவர்களின் அன்புத்தாயாரும், வாசுகி, வதனி, பாமினி, ஜெனீவா, தில்லை நடேசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, இரட்ணேஸ்வரி, மற்றும் சிவநேசன், குணநேசன், செல்வநேசன், ரவிநேசன், தேவநேசன், மகாதேவன், நவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திப், Dr.கீர்த்திகா, ஜெசிக்கா, ஜெனிபர், ஜெனிற்றா, டாலியா, ஆரணி, ஆரணன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். இறுதிக்கிரிகைகள் 18.07.2025 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி 10.00 மணி அளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:-**
**சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.** (4797)
**கணவர் த.இராஜதுரை**
**077 724 6352**

## இராசிபலன்

**15.07.2025**
**ஆனி 31 , செவ்வாய்க்கிழமை**
**பஞ்சமி முன்னிரவு 10.47 மணிவரை**
**சதயம் முற்பகல் 7.20 மணிவரை**
**சுபநேரம் 10.30-12.30 மணிவரை**
**இராகுகாலம் 3.30-4.30**
**சந்திராஷ்டமம்-மகம்.**

**வளவன்**


**மேஷம்**
எதிர்காலம் இனிமையாக அமையத் திட்டங்கள் தீட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


**கடகம்**
மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.


**துலாம்**
வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தாழ்ந்த சுபாவ முண்டு.


**மகரம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ் வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், உங்களின் வார்த்தையைப் பலரும் கேட்டு நடப்பர், பணப்புழக்கம் கூடும் நாள்.


**ரிஷபம்**
புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


**சிம்மம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டிய நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


**விருச்சிகம்**
வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.


**கும்பம்**
உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறும் வாய்ப் புண்டு.


**மிதுனம்**
உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.


**கன்னி**
கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், பொது வாழ்வில் கௌரவம் கூடும் நாள்.


**தனுசு**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.


**மீனம்**
பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**வார்த்தைகள் முக்கியம் அல்ல அதன் அர்த்தம் தான் முக்கியம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் தரமுயர்த்தப்பட வேண்டும்

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை

(சாவகச்சேரி)

கைதடி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் தரமுயர்த்தப்பட வேண்டும் என இயற்கையின் நண்பர்கள் அமைப்பினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

கைதடி மத்திய மருந்தகம் 1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து ஏ-9 வீதியில் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி ஆகிய நகரங்களில் இருந்து அண்ணளவாக 10 கிலோமீற்றர் தூரத்தில் ஒரு மையப்பகுதியில் கைதடி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் என்ற பெயரில் இயங்கிவருகின்றது.

சமூகத்தில் விசேட தேவையுடையவர்கள் நிறைந்து வாழும் இப்பிரதேசத்தில் இம்மருத்துவமனை (ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம்) அமைந்துள்ளமையால் அதன் அமைவிடமும், இருப்பும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்தப் பராமரிப்பு நிலையத்தின் சேவை கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள வயோதிபர்கள், நவீல்ட் விழிப்புலனற்றோர் பாடசாலையில் உள்ள விசேட தேவையுடையவர்கள், பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளின் காப்பகமான அரச சிறுவர்கள் பராமரிக்கும் இல்லத்தின் குழந்தைகள் என பரந்துள்ளது.

மேலும் விழிப்புலனற்றோருக்கான தொழிற்பூங்கா, யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவபீட விடுதி எனப் பலர் இப்பிரதேச மருத்துவமனையை நம்பி வாழ்கின்றனர்.

அத்துடன் வடமாகாண ஆயுர்வேத போதனா மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக ஆங்கில மருத்துவமனைகளை நாடும் நோயாளிகள், அருகில் அமைந்துள்ள வடமாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றில் வேலைசெய்யும் அலுவலர்கள் மற்றும் கைதடி,



நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, கோயிலாக் கண்டி, மட்டுவில், சரசாலை போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்கள் என மருத்துவமனையின் தேவை அதிகரித்த நிலையில் உள்ளது.

எனவே கைதடி ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையத்தை உடனடியாக கைதடி பிரதேச மருத்துவமனையாக தரமுயர்த்த உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும் என்று மக்களின் சார்பாக இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கேட்டுக் கொள்கின்றது என மேலும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (8-30)

# குற்றங்களுக்கான சட்டங்களை இறுக்கமாக நடைமுறைப்படுத்துங்கள்

## அரசசார்பற்ற இணையம்

(யாழ்ப்பாணம்)

நிகழ்ந்த அல்லது நடைபெறும் குற்றங்களுக்கான சட்டங்கள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் புதை குழிகள் உள்ளிட்டவற்றுக்கு காலம் தாழ்த்தாது விசாரணைகளை விரைவுபடுத்தி பாதிக்கப்பட மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும் என அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் சுகிர் தராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், எமது இணையம் 22 அமைப்புக்களை ஒன்றிணைத்து மனித உயிர்களின் பாதுகாப்புக்காக குரல் கொடுத்து வருகிறது.

தற்போது வடக்கில் பல மனித அவலங்கள் நிகழ்த்தப்பட்டதற்கான புதைகுழிகள் இனங்காணப்பட்டு அவை அகழப்பட்டு அதிகளவான மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இது மிகப்பெரும் மனித உயிர் சார்ந்த விடயமாகும். எமது ஒன்றியம் கடந்த காலம் முதற்கொண்டு இன்றுவரை மனித உரிமைகள் பாதுகாப்பு சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தி குரல் கொடுத்து அரசுகளுக்கு பெரும் அழுத்தத்தை கொடுத்து வரும் அமைப்பு என்ற ரீதியில் தற்போதைய பேசுபொருளான மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு உடன் விசாரணை மேற்கொண்டு நியாயம் கிடைக்க செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

அத்துடன் அண்மையில் கொழும்பில் மர்மமான முறையில் இறந்த பாடசாலை மாணவியின் மரணம் தொடர்பிலும் விசாரணைகள் செய்யப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்பட வேண்டும் என கோருகிறோம் எனத் தெரிவித்தார். (8-33)

# வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்-ஆளுநர்

(தருமபுரம்)

வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்புடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் கச்சாயில் நேற்று ஆரம்பமானது.

இதன்போது ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளை ஈ தாக்கத்தால் யாழ். மாவட்டம் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளை ஈ தாக்கம் கடுமையாக ஏற்பட்டிருந்தது.

பின்னர் அது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இப்போது கட்டுப்படுத்தப்பட முடியாதளவுக்கு பெருகியுள்ளது. பல தென்னைகளில் உற்பத்தி பூச்சியமாகியுள்ளது. எமது மக்கள் தங்கள் வீட்டுத் தேவைக்கு அப்பால் தேங்காய் விற்பனை ஊடாக சிறிய வருமானத்தையும் பெற்று வருகின்றனர்.

அவற்றுக்கும் வெள்ளை ஈ தாக்கத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதேநேரம் அதிமேதகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வடக்கில் தென்னை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான தென்னை முக்கோண வலயத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

எனவே வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதன் ஊடாகவே எதிர்காலத்தில் தென்னை உற்பத்தியை இங்கு அதிகரித்துக்கொள்ள முடியும் என்பதால், இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (8-3-16)

# க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள்-2024

## யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

### 9ஏ -ஆங்கில மொழி மூலம்

பி.அபினா, ஜெ.அனனியாபிரின்ஸி, என்.அன்பனுஹா, எஸ்.ஆரணி, கே.அஷ்விகா, கே.அஷ்வினி, ஆர்.அஷ்விதா, எ.ஆதித்யா, எல்.அத்மிகா, எல்.டெனிலா, ஜெ.கஜானி, ஜெ.ஞானவி, ஆர்.ஹருனியா, எம்.ஜதுர்ஷி, பி.கஜாழினி, ஜெ.கவினயா, என்.கிருபாஷினி, எஸ்.லக்ஷனா, ஆர்.மஷ்மிதா, எம்.மதுலா, பி.மயூரி, எஸ்.மெனுசா, ரி.நந்தீகா, ஜெ.நிருஷா, எஸ்.நிவேதிகா, எம்.பஸ்மியா, எஸ்.பவனுஜா, கே.பிருதுவி, கே.சஜீவர்னா, என்.ஷஹானா, எஸ்.சாருஹா, எஸ்.சயனிகா, வி.ஷாஜனா, எம்.ஷகானா, எஸ்.ஷகானுஜா, எஸ்.ஷஸ்வினி, எஸ்.சிவவராகி, எம்.சோபனி, எஸ்.சௌமியா, எஸ்.சுபர்னா, கே.சுர்ரபி, என்.சுவேதகா, ஆர்.தக்ஷயா, ஜெ.தருணிகா, கே.தேனகா, வி.தேனுகா, ஜெ.துஷானி, ரி.வைஷ்னவி, கே.விபூஷனா, ஜெ.யுவேதிகா.

### 9ஏ- தமிழ்மொழி மூலம்

எ.அபிஷா, கே. அபிஷ்ணவே, ஜி.அக்ஷெனி, ரி.அக்ஷயா, எஸ்.அமிர்தினி, ஜெ.ஆனந்தகைகாரி, பி.ஆனந்செல்வி, கே.அனுஜா,இ.அபிநயா,கே.ஆருணியா, எஸ்.ஆஷ்லி சஞ்சயனா, எம்.பபினகா, ரி.பரனிகா, கே.பவநிதி, கே.பவதாரணி, பி.பிருதுவி, எஸ்.ப்ருதுவி, எஸ் டிஷாகினி, எம்.பாத்திமா நுஹா, ஆர்.குந்தவி, ஜெ.ஜனுஷிகா, ரி.ஜஷ்வினி, எம்.ஜதுர்ஷா, பி.ஜதுஷிகா, பி.ஜெரன்சிகா, எஸ்.கஜானா, எஸ்.கவீனா, எல்.கவினா, எம்.கவிப்பிரியா, கே. கீர்த்தனா, வி.கம்ஷா, கே.கிரிவர்தனி, என்.கிருசிகா, எல்.கிருதிகா, எஸ்.கிஷாந்தினி, சி.கௌசியா, யு.லக்ஷாயினி, வி.லக்ஷினி, ஜெ.மஹலினி, எஸ்.மயூரி, கே.மிருந்திகா, வி.நறுமுகை, எஸ்.நிக்ஷிகா, இ.நிறுத்திகா, பி.பறுஷியா, வி.பருத்விலி, எஸ்.பவந்திகா, பி.பவிசாஜினி, பி.பவிஷா, எஸ்.பவித்திகா, எல்.சங்கவி, கே.சப்தவி, கே.சர்மிகா, யு.சஸ்மிதா, கே.சயந்தா, எல்.ஷாலரசி, எஸ்.ஷாரிஹா, வி.ஷர்மிகா, ஆர்.சுருதிகா, எஸ்.தமிழிசை, எஸ்.தனுசியா, எம்.தாரணி, ரி.தாரணி, எம்.தரனிகா, எஸ்.தரனிகா, கே.தவப்பிரியா, எல்.திபிஷா, ரி.டியானா, யு.வைஷ்னவி, வி.விஷாலி.

### 8ஏ- ஆங்கில மொழி மூலம்

வி.அகமதி, யு.ஜாகினி, எஸ்.ஜக்ஷனா, கே.கஜானி, எஸ்.மாருதி, ஆர்.மேரி அஷானா, யு.நாரனி, பி.றூபலக்ஸ்மிதா, ஆர்.தேஜஸ்வினி, எஸ்.விகாஷினி, எல்.ஹரிணி, எம்.சிவகஜானி.

### 8ஏ -தமிழ் மொழி மூலம்

எ.ஜரினி, எஸ் அபர்னா, எம்.காவியா, கே.கேசாஜினி, கே.கிஷாலினி, வி.லக்ஷனா, கே.லெனுஷா, கே.லிதிகா, எஸ்.நர்தவி, ஆர்.நிருபா, எஸ்.பதுமிகா, எஸ்.பவிஷனா, பி.சாத்விகா, எஸ்.ஷானுகா, எஸ்.சுரபி, ஜெ.தரனிகா, ஜெ.தருன்சிகா, என்.வைஷ்னா, பி.விணோஜினி, எ.விஷாலினி, ரி.டிலக்ஷிகா, கே.லக்ஷிகா, ரி.பிறைநிலா, எஸ்.தரனிஜா.

## யாழ்/இந்து மகளிர் கல்லூரி

### 9ஏ

ஜெ.அபினயா, எம்.அக்ஷயா, எஸ்.அம்சாகினி, எம்.அனுஷ்கா, என்.ஜனனி, கே.கிஷாந்தினி, எ.மகிழினி, ஜி.மேனிஷா, எஸ்.சங்கவி, எ.தாரணி, யு.தினோஷனா, கே.துளக்சிகா, வி.வத்சஜா.

### 8ஏ

எ.அகிசனா, வி.அஷ்விகா, என்.பைரவி, ஜெ.பிருதிகா, எம்.பாத்திமா சியானு, ரி.ஹர்சனா, வி.கபிஷ்யா, ஜெ.கேஷிகா, கே.குழலிசை, ஆர்.மதுர்ஷிகா, என்.முகூர்த்தனா, சி.ரம்மியா, வை.திவான்சிகா, ஜெ.வைஷ்ணவி, ஜெ.வர்ஷா, எஸ்.பானுஜா, கோ.நர்த்தகி, ஜெ.ஸ்வாதி.

### 7ஏ

ரி.அகழிசை, எம்.டினோஜா, எஸ்.ஜருஷா, கே.கர்ஷிகா, சி.கஷ்மிகா, கே.மதுசனா, என்.நிரோஜிகா, எம்.நிஸ்மிதா, எஸ்.சைனிகா, ஆர்.சங்கீதா, வி.ஷாரங்கவி, எஸ்.சிவகங்கா, எஸ்.துஜிகா, கோ.ரிதர்ஷிகா, வி.வித்தியாபூசணி, என். கஜலக்சி, எஸ்.சர்வினி, கே.தேனுஜா.

### 6ஏ


எஸ்.கஜீபா, வி.கிருஷ்மிகா, ஜெ.லக்ஷனா, எம்.சங்கவி, எம்.திவியா, ஆர்.வாசனா, ரி.வினுயா, ஜெ.அஷ்வினி, எ.காஜானிஹா, எஸ்.ஹர்ணி, எஸ்.கபிஷாலினி, கே.கபிசனா, ஜெ.கரன்ஜா, டி.மெறிஸ்ரினா, எ.மெதினிஹா, எஸ்.ராகவி, பி.சப்திகா, ஆர்.ஹருண்யா, ஆர்.ராகவி, கே.கனினிலா, எம்.லெனிசியா, கே.மிருர்திகா.

### 5ஏ

என்.சகானா, என். ஆர்த்தி, ஜெ.டதுஷனா, ஆர்.கீதாமி, ஜெ.நிலக்சிகா, வி.நிவிதா, வி.பிரதிஷா, எஸ்.சாமினியா எஸ்.சங்கிசாய், எல்.சீரணி, எஸ்.தமிழ்பிரியா, ஆர்.அபிஷயா, எம்.நட்சத்திரா, பி.ரிஷாங்கி, ரி.றுக்ஷனா, என்.சிவாஞ்ஜலி, எஸ்.ஸ்ருத்திக்கா, எ.மதுரகலாவித்யா, கே.நேலஷலேகா, வை.ஜெயஷமுகி, ஜெ.சயிந்தா, வி.தனுசியா, கே.சுஹநிதா, எஸ்.ஹரிணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்திரைப்படத்தில் அறிமுகமாகும் 'வேடன்'



(டில்லி)

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பெண் ஒருவரின் மகனான வேடன், மலையாளக் கலைத்துறையில் பிரபலமான ராப் இசைப் பாடகராக உள்ளார்.

அவரின் பாடல்கள், சாதி மற்றும் நிற ஒடுக்கு முறைக்கு எதிரானதாக உள்ளன.

இந்தநிலையில் விஜய் மில்டன் இயக்கும் புதிய திரைப் படத்தில் ரெப் பாடகர் வேடன் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர் தமிழில் இசையமைப்பாளராக அறிமுகமாகின்றார். விஜய் மில்டன் இயக்கிவரும் குறித்த திரைப்படத்தில் பரத், சுனில், ஆரி அர்ஜுனன், பால்டப்பா, அம்மு அபிராமி, கிஷோர் டிஎஸ், விஜேதா, பிரசன்னா பாலச்சந்திரன் மற்றும் இமான் அண்ணாச்சி ஆகியோர் முக்கிய கதா பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளில் வெளியாகவுள்ள இந்த திரைப்படத்தின் பெயர் விரைவில் வெளியாகவுள்ளது. (நி)

# 7 மாதங்களில் 922 கிலோ ஹெரோயின் பறிமுதல்

(கொழும்பு)

இந்த ஆண்டின் கடந்த ஏழு மாதங்களில் இலங்கை பொலிஸார் மற்றும் முப்படையினர் இணைந்து நாடு முழுவதும் நடத்திய கூட்டு நடவடிக்கைகளின் போது மொத்தம் 922 கிலோ கிராம் ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எப்.யூ.வுட்லர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இந்த கூட்டு நடவடிக்கைகள் 2025 ஜனவரி 1, முதல் 2025 ஜூலை 11 வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இந்தக் கால கட்டத்தில் அதிகாரிகள் 1,386 கிலோ கிராம் ஐஸ், 10,895 கிலோகிராம் கஞ்சா, 22 கிலோகிராம் கொக்கெய்ன் மற்றும் 329 கிலோ கிராம் ஹாஷ் போன்ற போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி)

# நீதம் சட்ட இதழின் வெளியீட்டு விழா




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுத்த நீதம் சட்ட இதழின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசாபதி கலையரங்கில் நடைபெற்ற இதழ் வெளியீட்டு விழாவில், உயர் நீதிமன்ற நீதியரசர் குமுதினி விக்கிரமசிங்கே பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம் சிவில் மேல் முறையீட்டு நீதி மன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (8-33)


## யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
## தரம் 12 அனுமதி-2027

யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் தரம் 12 (2027) இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது. க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை 2024 (2025) சித்தி பெற்றவர்கள் மட்டும் பாடசாலை நேரத்தில் (காலை 8.00-1.00 மணி) விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம் 150.00 ரூபாவினை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **பதிவுத் தபாலில் மட்டுமே** அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி 14.07.2025**
**விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத் திகதி 25.07.2025**
**விண்ணப்படிவம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி**
**அதிபர், யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

காலதாமதமாகி கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு- **கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.**

**அதிபர்.**

(சி-3411)



# சேவை நலன் பாராட்டு

**யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர்**

**உயர்திரு.கந்தையா புஸ்பராஜா** (B.A,PGDE,M.Ed)



ஆரம்பக்கல்வி - யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி- யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
உயர்தரக் கல்வி - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

***தகைமைகள்***

**B.A -பேராதனைப் பல்கலைக்கழகம்**
**PGDE-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**M.Ed - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**கல்விப்பணியில் 37 வருடங்கள்**
**ஆசிரியர் முதல் நியமனம் 17.08.1988- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**
**ஆசிரியர் - 12.01.2009- யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**
**அதிபர் - 09.12.2010- யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்**

யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர் உயர்திரு.கந்தையா புஸ்பராஜா அவர்கள் 37 வருட கல்விச் சேவையில் 14 வருடங்கள் எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றி பாடசாலையின் பௌதீக வளங்களை அதிகரித்து இணை பாட விதானங்களை வளர்ச்சி அடையச் செய்து, நூலகம், திறன் வகுப்பறை போன்றவற்றை ஆரம்பித்து தனது விடாமுயற்சியால் "பாடசாலை கலை அரங்கை" மீள அமைத்து; புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக மாணவர்களை சித்தி பெற வைத்து மற்றும் தனது செயல் திறமையால் பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க வைத்தமையும் அவரின் தனித்திறமையின் எடுத்துக்காட்டு.

2010 ஆம் ஆண்டு அதிபராக கடமை ஏற்று திறம்பட பணியாற்றி 15.07.2025 இன்று ஓய்வுபெற்று செல்லும் அதிபர் உயர்திரு.கந்தையா புஸ்பராஜா அவர்களின் ஓய்வு காலம் சிறக்க இறைவன் அருள்புரிய வேண்டுமென இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

**பாராட்டி வாழ்த்தும்:**

திரு.ராம் விசுவநாதபிள்ளை–தலைவர்– பழைய மாணவர் ஆசிரியர் நலன்விரும்பிகள் சங்கம்–கனடா.
திருமதி. மனோன்மணி வரதராசா–முன்னாள் தலைவர்–பழைய மாணவர் ஆசிரியர் நலன் விரும்பிகள் சங்கம்–கனடா
முன்னாள் உப அதிபர் யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.
திரு. சிவசாமி அமிர்தலிங்கம் – இணைப்பாளர்– கனடா பழைய மாணவர் ஆசிரியர் நலன்விரும்பிகள் சங்கம் யாழ். கிளை.
திரு. திருநாவுக்கரசு சிறீஸ்கந்தராசா – இணைப்பாளர் கனடா பழைய மாணவர் ஆசிரியர் நலன் விரும்பிகள் சங்கம். யாழ். கிளை
நிர்வாகிகள் – நல்லூர் வன்னிய சிங்கம் பொதுப் பணி மன்றம் சனசமூக நிலையம்.

[4796]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பழம்பெரும் நடிகை
### சரோஜாதேவி காலமானார்




(டில்லி)
பழம்பெரும் நடிகை சரோஜா தேவி (87) காலமானார். உடல்நலக் குறைவு காரணமாக பெங்களூருவில் உள்ள இல்லத்தில் நேற்றுக் காலமானார்.

தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் 200இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்து புகழ் பெற்றவர். இந்திய அரசின் உயரிய விருதுகளான பத்மபூஷன், பத்மஸ்ரீ விருதுகளை பெற்றுள்ளார்.

சரோஜா தேவி மறைவால் திரையுலகினர் சோகத்தில் மூழ்கி உள்ளனர். அவரது மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (நி)

## நூலிழையில் உயிர்தப்பினார்
### ஈரான் ஜனாதிபதி மசூத் பெசஷ்கியான்
#### புதிய தகவலை வெளியிட்டது ஈரான் ஊடகம்



(டெஹ்ரான்)
இஸ்ரேல் கடந்த மாதம் நடத்திய தாக்குதலில் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசஷ்கியான் காலில் காயத்துடன், நூலிழையில் உயிர் தப்பியதாக, அந் நாட்டின் இராணுவத்துக்கு சொந்தமான பார்ஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்காசிய நாடான ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பது தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் என்று கூறி, இஸ்ரேல் ஜூன் இல் தாக்குதல் நடத்தியது ஈரானும் பதிலடி தந்தது. 12 நாட்கள் இரு தரப்பிலும் மாறி மாறி தாக்குதல் தொடர்ந்தது.

இதில் ஈரானின் அணுசக்தி வளாகங்கள் அழிக்கப்பட்டன. முக்கிய இராணுவ தளபதிகள், அணு விஞ்ஞானிகள் பலர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல் குறித்த புதிய தகவலை ஈரான் புரட்சிகர இராணுவ படைக்குச் சொந்தமான பார்ஸ் ஊடகம் வெளியிட்டுள்ளது.

அதில் கூறியுள்ளதாவது:

மேற்கு ஆசிய நாடான லெபனானின் ஹெஸ்பொல்லா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஹசன் நசருல்லாவை பெய்ரூட்டில், இஸ்ரேல் விமானப் படைகள் வான் வழி தாக்குதல் வாயிலாக கடந்தாண்டு கொன்றன.

அதே பாணியில் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசஷ்கியானை ஜூன் 16இல் கொல்ல இஸ்ரேல் விமானப் படை முயற்சித்தது.

மேற்கு டெஹ்ரானின் ஒரு அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழ் தளத்தில் ஈரானின் தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் ஈரான் ஜனாதிபதி, பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆகியோர் பங்கேற்றனர்.

அப்போது கட்டடத்தின் நுழைவு மற்றும் வெளியேறும் வழிகளை குறிவைத்து, ஆறு ஏவுகணைகளை இஸ்ரேல் ஏவியது. இதனால் காற்றோட்டம் தடைப்பட்டது மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இருப்பினும் முன்னெச்சரிக்கையாக அவசரகால வழி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது வழியாக ஈரான் ஜனாதிபதி வெளியேற்றப்பட்டார்.

இந்தத் தாக்குதலில் அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. அவரின் இருப்பிட விபரம் துல்லியமாக எப்படி இஸ்ரேலுக்கு தெரிந்தது என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என அதில் கூறப்பட்டுள்ளது. (நி)

## லண்டனில் விமான விபத்து!



(லண்டன்)
இங்கிலாந்தின் தென் கிழக்கு கடற்கரையில் உள்ள லண்டன் சவுத் எண்ட் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு சிறிய விமானம் விபத்துக்குள்ளானது.

இது பாரிய அளவிலான அவசர நடவடிக்கை மற்றும் விமான சேவைகளை இரத்து செய்யவும் வழிவகுத்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சவுத் எண்ட் - ஆன் - சீயில் உள்ள இடத்தில் 12 மீற்றர் நீளமுள்ள விமானம் தீப்பிடித்து எரிவதாக மாலை 4 மணியளவில் எசெக்ஸ் பொலிஸாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து மீட்பு பணிகள் ஆரம்பிக்கப் பட்டதுடன், பொது மக்கள் விபத்து நடந்த பகுதிக்கு செல்வதை தவிர்க்கு மாறும் அறிவுறுத்தப்பட்டது.


விமானத்தில் எத்தனை பேர் இருந்தனர் அல்லது அவர்களின் நிலை குறித்து அதிகாரிகள் இன்னும் வெளியிடவில்லை.

இந்த விபத்தால் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் குறைந்தது நான்கு திட்டமிடப்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டதாக விமான நிலைய வலைத்தளம் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து ஊடகங்களால் பகிரப்பட்ட புகைப் படங்கள், லண்டனுக்கு கிழக்கே சுமார் 35 மைல்கள் (56 கிமீ) தொலைவில் அமைந்துள்ள விமான நிலையத்திற்கு மேலே காற்றில் ஒரு தீப்பந்து எழுவதைக் காட்டியது. (நி)

## உளவாளியாகும் தேனீக்கள்
### சீன விஞ்ஞானிகள் புதுமுயற்சி

(பீஜிங்)
தேனீக்களின் மூளையைக் கட்டுப்படுத்தி, அவற்றை தமது தேவைக்கு ஏற்ப பயணிக்க வைக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



தேனீக்கள் இயற்கை பேரிடர், தீவிரவாத தடுப்புக்கு உதவும் என்று கூறப்பட்டாலும், தேனீக்களை உளவாளிகளாகவும் பயன்படுத்த முடியும்.

உயிரினங்களைக் கருவிகள் வாயிலாகக் கட்டுப்படுத்தும், "சைபோர்க்" என்ற தொழில்நுட்பம் தொடர்பாகப் பல நாடுகள் ஆராய்ச்சி செய்து வருகின்றன.

இந்த வகையில், தேனீக்களின் மூளையைக் கட்டுப்படுத்தி, தம் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தும் முயற்சியில், சீனாவைச் சேர்ந்த பீஜிங் தொழில்நுட்ப மையத்தின் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.



இதற்
யுள்ள
கியுள்ள
ஊசிகள
கட்டுப்
கிறது.
இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு


# மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றம்!

## வான்பரப்பை மூடியது ஈரான்!

**(டெஹ்ரான்)** ●●●●●●●●●

**ஈரான் தனது வான் எல்லையை மீண்டும் மூடியுள்ளதால் மத்திய கிழக்கில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



ஈரான், நேற்றுக் காலை முதல் தனது மேற்கு மற்றும் தென்மேற்கு வான் பரப்பை தற்காலிகமாக மூடியதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஈரானின் இந்த நடவடிக்கை காரணமாக பல சர்வதேச விமானங்கள் ஈரான் வான்பரப்பைத் தவிர்த்து பாகிஸ்தான், கட்டார் மற்றும் துருக்கி வழியாக பயணிக்கின்றன.

இதனால் விமான நிலையங்களில் தாமதம் மற்றும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த வாரம், ஈரான் மற்றும் இஸ்ரேலுக்கிடையில் மீண்டும் உளவுத்துறை தாக்குதல், சைபர் தாக்குதல்கள் மற்றும் கடல் ரீதியான பதில்கள் இடம்பெற்றுள்ளன.

ஜூலை 10 அன்று, ஈரானில் உள்ள இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடி விபத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனால், பாதுகாப்பு காரணங்களுக்காக வான் பரப்பை மூடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஈரான் விளக்கம் அளித்துள்ளது. (நி)

---

இதற்காக, 74 மில்லி கிராம் எடை
ள்ள சிறிய கருவியை உருவாக்
புள்ளனர். அவற்றில் உள்ள சிறிய
சிகள், தேனீயின் மூளையைக்
டுப்படுத்தும் எனத் தெரிவிக்கப்படு
றது.

இதேவேளை, எந்த இடத்திலிருந்தும், குறித்த தேனீக்களின் இயக்கத்தைக் கண்காணிக்க முடியும்.



இதுவரை நடந்துள்ள ஆய்வுகளில், விஞ்ஞானிகளின் உத்தரவுகளில், 90 சதவீதத்தைத் தேனீக்கள் நிறைவேற்றி உள்ளன.

இதற்கமைய பேரிடர் காலங்கள் மற்றும் பயங்கரவாத தாக்குதல்களின் போது, மனிதர்கள் உடனடியாக செல்ல முடியாத இடங்களுக்கு, இது போன்ற தேனீக்களை அனுப்பி, அங்குள்ள நிலவரத்தைத் தெரிந்து கொள்ள முடியும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

---

## உக்ரைனுக்கு சக்திவாய்ந்த ஏவுகணைகள் வழங்குவதாக ட்ரம்ப் அறிவிப்பு



(வோஷிங்டன்)

ரஷ்யாவின் படையெடுப்பை எதிர்த்துப் போராட உக்ரைனுக்கு உதவுவதற்காக அமெரிக்கா பேட்ரியாட் வான் பாதுகாப்பு ஏவுகணைகளை அனுப்பும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

உக்ரைனுக்கு எத்தனை அமைப்புகள் அனுப்பப்படும் என்பதைக் குறிப்பிடவில்லை. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், மொஸ்கோவின் படையெடுப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை மறுத்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

ஜனவரி மாதம் வெள்ளை மாளிகைக்குத் திரும்புவதற்கு முன்பு அமெரிக்கத் தேர்தல் பிரசாரத்தின் போது, உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக ட்ரம்ப் உறுதியளித்திருந்தார்.


ஆனால், போரை முடிவுக்குக் கொண்டுவர அல்லது போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ள புடினை சமாதானப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் இதுவரை தோல்வியடைந்துள்ளன.

இதனிடையே, உக்ரைன் மற்றும் பிற பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ட்ரம்ப் நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ருட்டேவைச் சந்திக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுகங்களில் சிக்கியிருக்கும் ஆயிரத்திற்கு மேற்பட்ட வாகனங்கள்

## சிக்கலில் இறக்குமதியாளர்கள்



(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் இன்னும் துறை முகங்களில் சிக்கியிருப்பதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரெஞ்சிகே தெரிவித்துள்ளார்.

அவற்றை விடுவிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், அதற்கு உரிய பதிலும் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல் நடத்துமாறு கோரிய போதிலும், இன்னும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

இந்த வாகனங்களை விடுவிக்காமல் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் வைத்திருப்பதால், தாமத கட்டணங்களை இறக்குமதி யாளர்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

அம்பாந்தோட்டை துறைமுகம் வேறொரு நாட்டிற்குச் சொந்தமானது என்பதால், செலுத்தப்படும் தாமதக் கட்டணங்கள் அந்த நாடுகளுக்கு டொலர்களில் மாற்றப்படுகின்றன.

கொழும்புத் துறைமுகத்தில் உள்ள பெரும்பாலான வாகன நிறுத்துமிடங்களும் தனியார் துறையைச் சேர்ந்தவை என்பதால், அந்த தாமதக் கட்டணங்களும் அவர்களுக்குச் செல்வதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1993- இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, sale Executive
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். விவாகரத்தானவர்
தொ.இ: B/15489

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
9 இல்சூரி செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-B Tech,Canada
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15490

பிறப்பு:1981-இந்து
நட்சத்திரம்:சுவாதி
8இல் செவ்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: O/L,Painting
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15492

பிறப்பு: 1991- இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்:6"
தகைமை/தொழில்: Dip in Agriculture, Post Master
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15494

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L, Phone Repair
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15495

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: சதயம்
7இல் செவ்
கி-பா-47
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc, IT Field
எதிர்பார்ப்பு: Degree Holder, வெளிநாடு
தொ.இ: G/15467

பிறப்பு - 1998 - இந்து
நட்சத்திரம்: மூலம்
கிபா- 14 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS (Final Year).
எதிர்பார்ப்பு: Doctor, Engineer.
தொ.இ: G/15023

பிறப்பு -1998 - இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
1 இல் செவ்
உயரம்: 6'
தகைமை/தொழில் - Unani Medical Student (3rd Year, Colombo University)
எதிர்பார்ப்பு : Doctor, Engineer, உயர் தொழில்.
தொ.இ: G/15025

பிறப்பு - 1991 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
7 இல் செவ்
கி.பா- 15
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: London.
எதிர்பார்ப்பு - வெளிநாடு UK மட்டும்.
தொ.இ: G/15030

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா -24
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - NCT Civil Engineer, DO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம். வெளிநாடு
தொ.இ: G/10704

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 414

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## கர்ணங்கள்!

நேற்று வரைக்கும் அந்த நபர் உறுதியாகத்தான் சார் இருந்தான். இன்றைக்குத் திடீர் என்று கர்ணம் பாய்ந்துவிட்டான்.என்று சொல்வது உண்டு.

அதற்கு என்ன அர்த்தம் என்றால், சொன்ன வார்த்தையிலேயிருந்து திடீர் என்று "பல்டி" அடித்து விட்டான் அர்த்தம். இப்படிப்பட்ட மனிதர்கள் இன்றைக்கு ரொம்ப அதிகம்.

மனிதர்களுடைய சுபாவத்தை வைத்து ஆன்மிகவாதிகள் இவர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள்.

கஜ கர்ணம் போடுபவர்கள் சிலபேர். அஜ கர்ணம் போடுபவர்கள் சிலபேர். கோ கர்ணம் போடுபவர்கள் சிலபேர். இதுதான் அவர்கள் பிரித்திருக்கின்ற மூன்று பிரிவு. கஜ கர்ணம் - அஜ கர்ணம் -கோ கர்ணம். கஜம் என்றால் யானை. அஜம் என்றால் ஆடு. கோ என்றால் பசு! யானையோட சுபாவம் என்ன தெரியுமா?

அது எப்பவும் தன்னுடைய நான்கு காலையும் சரியாக ஊன்றி நிற்காது. ஒன்றுமாற்றி ஒன்றை தூக்கித் தூக்கி வைத்துக்கொண்டு அப்படியும் இப்படியுமா அசைந்துஆட்டிக்கொண்டுதான் இருக்கும்.

இது மாதிரி சில மனிதர்கள் உண்டு.

இவர்கள் எல்லாம் எப்படின்னா ஒரே விடயத்திலே தங்களுடைய கருத்தை செலுத்தாமல் பல விடயங்கள்லே ஈடுபட்டுக் குழம்புவார்கள்!

யானை ஒரு காலையும் உறுதியாக ஊன்றாதது மாதிரி இவர்கள் ஒரு விடயத்திலேயும் உறுதியாக இருக்கமாட்டார்கள். இதுவா அதுவா என்று குழம்பிக்கொண்டே இருப்பார்கள். இவங்கள் எல்லாம் "கஜகர்ணம்" போடுகிறவர்கள்!

அஜகர்ணம் போடுகிறவர்கள் எப்படி தெரியுமா?

ஆட்டு வாலைப் பிடித்து யாராவது இழுத்தால் உடனே தன் தலையைத் தொங்கப் போட்டுக்கும்! அதுமாதிரி சில மனிதர்கள் உண்டு.

அவர்கள் குறைகளை யாராவது சுட்டிக் காட்டினால் போதும் உடனே அவர்களை வெறுக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

அவர்களை திரும்பிக்கூட பார்க்க மாட்டார்கள். ஆடு மாதிரி தலையை குனிந்துகொண்டு போய்விடுவார்கள்.

இந்த மாதிரி ஆசாமிகளுக்கெல்லாம் "அஜகர்ணம்" போடுகிறவர்கள் என்று பெயர்!

மூன்றாவது வகை ஆசாமிகள் "கோகர்ணம்" போடுகிறவர்கள். கோ என்றால் பசு பசு மாட்டு உடம்பிலே எந்த இடத்திலே விரலாலே தொட்டாலும். அந்த இடம் உணர்ச்சி வசப்பட்டு உடம்பு சிலிர்க்கும்!

அது மாதிரி. அறிவாளிகள் நடந்துகொள்வார்கள்.

எந்த சிறு குறையைச் சுட்டிக்காட்டினாலும் அதைப் புரிந்துகொண்டு. மன்னிப்புக் கேட்டு திருந்துவார்கள்.

இவர்களைத்தான் "கோ கர்ணம்" போடுகிறவர்கள் என்று சொல்வது!

இந்தக் காலத்திலேயெல்லாம் காரியக்கர்ணம் போடுகின்றவர்கள்தான் அதிகம்.

ஏதாவது காரியம் சாதிப்பதற்காக கர்ணம் போடுவது காலிலே விழுவது.

இது மாதிரி ஆசாமிகள் எந்தக் காலத்திலேயும் உண்டு.

புத்தரிடமேயே போட்டுக்காட்டியிருக்கிறான் ஒரு ஆசாமி. அது என்ன கதை தெரியுமா?

ஒரு நாள் புத்தர். அவர் லேசாக கண்ணைத் திறந்து பார்த்தார். இவன் உடனே ஆரம்பித்தான்:

"எங்கள் வழிகாட்டியே! உங்களை மாதிரி ஒரு சிறந்த ஞானி இந்த உலகத்திலே வேறு யாருமே இல்லை.

உங்களை மாதிரி அன்பும் அருளும் ஒருங்கே கொண்ட வர்கள் வேறு யார் இருக்கிறார்கள்.? உங்களை மாதிரி பெருமைக்கு உரியவர்கள் யார் இருக்கிறார்கள்?"

அப்படி என்று புகழ ஆரம்பித்தான்.

இதைக் கேட்டதும் புத்தர். அவனைப் பார்த்து "சீடனே! எனக்கு முன்னால் தோன்றிய ஞானிகளை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். "தெரியாது ஐயா!" என்றான் அவன்.

"சரி," இனி எனக்கு அடுத்துத் தோன்றப் போகும் ஞானிகளையாவது உனக்குத் தெரியுமா?" என்றார்.

தெரியாது ஐயா! என்றான்.

"சரி. என்னையாவது நீ முழுமையாக புரிந்து கொண்டிருக்கிறியா?" - என்று கேட்டார். தலையை ஆடு மாதிரி தொங்கப் போட்டுக்கொண்டு இல்லை ஐயா!" - என்றான்.

என்னத்திற்கு அலங்காரமான" வார்த்தைகளாலே என்னைக் பிறகு குறிப்பிட்டாய்? அதனாலே எந்தப் பிரயோஜனமும் இல்லையே!" என்றார் புத்தர். இவன் பேசாமல், தலையைக்குனிந்து கொண்டே போய்விட்டான்.

கர்ணத்திலே "தோப்புக்கர்ணம்" என்று ஒன்று உண்டு. தவறு செய்த மாணவன், வாத்தியார் முன்னால் போடுவது. பாவம் செய்த மனிதன் ஆண்டவன் முன்னால் போடுவது.. எனக்குத் தெரிந்த ஒருவர் ரொம்பவும் அசந்துபோய் மெதுவாக நடந்து வந்தார். "என்னங்க விடயம்?" என்றேன்.

இப்பத்தான் 108 தோப்புக்கர்ணம் போட்டுவிட்டு நேராக நடந்து வந்துகொண்டிருக்கிறேன் என்றார்.

"கோயில்லேயிருந்து வந்துகொண்டிருக்கிறீர்களா?" என்றேன். "இல்லைங்க. வீட்டிலியிருந்து வந்துக்கொண்டிருக்கிறேன்!"

என்றார் அசட்டுத்தனமா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி பொதுச்சந்தையை புனரமைத்து தாருங்கள்!

## பிரதேச மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

**கொடிகாமம் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்டு நீண்ட காலமாக எந்தவிதமான புனரமைப்பும் இன்றிக் காணப்படுகின்ற வரணிப் பொதுச் சந்தையைப் புனரமைத்து மீளக் கட்டியெழுப்புமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்

வரணி ஏழு கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்துபட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. கிட்டத்தட்ட பத்தாயிரம் மக்கள் இங்கு வசித்து வருகின்றனர். இங்கு மத்திய கல்லூரி உட்பட பாடசாலைகள், பிரதேச வைத்தியசாலை, பொதுச் சந்தை, தபால் நிலையம் ஆகியன காணப்படுகின்ற போதிலும் இவை அனைத்துமே பல தேவைப்பாடுகள் மற்றும் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன.

குறிப்பாக சாவகச்சேரிப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட வரணிப் பொதுச் சந்தை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது.

போதிய இடவசதி காணப்படுகின்ற போதிலும் பாழடைந்த பழைய கட்டடம், சுற்றுவேலி இன்மை, மீன் சந்தைக் கட்டடம் வியாபாரிகளுக்கு ஏற்ற விதத்தில் இல்லாமை, மரக்கறிகளைப் பாதுகாப்பதற்கான வசதி இல்லாமை, இறைச்சிக்கடை உள்ள போதிலும் அது இயங்காமை உள்ளிட்ட பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு குறைபாடுகளுடன் சந்தை காணப்படுவதனால் வியாபாரிகளும்-அதே நேரம் நுகர்வோரும் மிகக் குறைந்த அளவிலேயே சந்தையை நாடுகின்றனர். நண்பகல் 12 மணியுடன் சந்தை வளாகம் வெறிச்சோடி விடுகின்றது.

இதனால் 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கொடிகாமம் சந்தை மற்றும் வேறு உள்ளூர் தனியார் வர்த்தக நிலையங்களை நாட வேண்டியுள்ளது.

எனவே வரணிப் பொதுச் சந்தையை புனரமைத்து பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-30)



## மண்டலாபிஷேக பூர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையார் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் பிரம்மஸ்ரீ முரளிதர ரமணானந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

காலை நிகழ்வுகளாக 108 கலாசாபிஷேகமும், மதியம் 12 மணிக்கு உச்சிக்கால பூஜையுடன் அன்னதானம் வழங்கலும், மாலை நிகழ்வுகளாக மாலை 6 மணி சாயங்கால பூஜையுடன் வசந்தமண்டபப் பூஜை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று விநாயக்பெருமான் அழகிய பூந்தண்டியகையில் வெளிவீதி உலா வரும் அருட்காட்சியும் இடம்பெறவுள்ளதென ஆலய தர்ம பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)


## வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த உதவ விரும்புபவர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தென்னை பயிர்ச்செய்கை சபையால் முன்னெடுக்கப்படும் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்துக்கு தன்னார்வமாக உதவி செய்ய விரும்புவர்கள் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி.வைகுந்தன் அவர்களை 076 690 4580 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

அத்துடன் இரு வார காலமும் எங்கெங்கு முன்னெடுக்கப்படவுள்ளன. மற் றும் தொடர்பு கொள்ள வேண்டிய வர்களின் விப ரங்களும் கீழே தரப்பட்டுள்ளன. (நி-8)

| பிரிவுகள் | திகதி | தொ.இ |
|---|---|---|
| சாவகச்சேரி பிதேச செயலர் பிரிவு | 14,15,16 | 077 611 6551 |
| கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு | 17,18 | 077 440 9933 |
| உடுவில் பிரதேச செயலர் பிரிவு | 21, 22 | 077 907 4230 |
| நல்லூர் பிரதேச செயலர் பிரிவு | 23, 24 | 077 822 2560 |
| யாழ்ப்பாணம் பிரதேசசெயலர் பிரிவு | 25 | 077 197 6959 |



இருவார கால தீவிர தேசிய கள செயற்பாடு - 2025" என்னும் தொனிப்பொருளில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் கச்சாயில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது. யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி, தென்னை பயிர்ச் செய்கை சபையின் பொதுமுகாமையாளர் விஜயசிங்க, தென்னை பயிர்ச் செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி.வைகுந்தன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன், விவசாய பிரதி மாகாணப் பணிப்பாளர் திருமதி எஸ்.அஞ்சனாதேவி உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 280 | 350 | 400 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 | 350 | 500 |
| தக்காளி | 180 | 180 | 200 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 300 | 280 |
| கோவா | 300 | 400 | 500 | 300 | 450 |
| கரட் | 450 | 500 | 550 | 370 | 500 |
| பூசணி | 120 | 160 | 130 | 120 | 120 |
| புடோல் | 120 | 150 | 200 | 100 | 160 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 600 | 650 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 170 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 200 | 250 | 350 |
| பயற்றங்காய் | 350 | 300 | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 240 | 240 |
| கறிமிளகாய் | 600 | 650 | 600 | 550 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 450 | 600 | 420 | 500 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 40-100 | 120 | 50 | 100 |
| தேசிக்காய் | 250 | 250 | 300 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 160 | 120 | 80-150 | 120-150 |
| இராசவள்ளி | 600 | 650 | 600 | 580 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | -- | 500 |
| முள்ளங்கி | 200 | 160 | 160 | 120 | 240 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர்

821





எந்தப் பகைவர்களை முன்னிட்டு இவ்வளவு பந்தோபஸ்தாகக் கோட்டை கட்டியிருக்கிறீர்கள்?" என்றான் கரிகாலன்.


"இளவரசே! எங்களுக்கென்று தனிப் பகைவர்கள் யாரும் இல்லை. சோழ குலத்தின் பகைவர்கள் எங்கள் பகைவர்கள். சோழகுலத்தின் நண்பர்கள் எங்களுக்கும் நண்பர்கள்". "தங்கள் வாக்குறுதி எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. இதைத் தங்கள் குமாரன் கந்தமாறனிடம் சொல்லி வையுங்கள். என்னுடைய நண்பனாகிய வாணர் குலத்து இளவரசனைக் கந்தமாறன் தன்னுடைய பகைவன் என்று கருதி வருகிறான். இது பெரும் பிழையல்லவா?" என்று ஆதித்த கரிகாலன் கூறிய போது கந்தமாறன் தலையைக் குனிந்து கொண்டான்.

### 16 ஆம் அத்தியாயம் "மலையமானின் கவலை"

மாளிகைக்கும் மதில் சுவருக்கும் இடையிலிருந்த நிலா முற்றப் பகுதியில் கந்தமாறன் வழிகாட்டிக் கொண்டு செல்ல, கரிகாலன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு நடந்தான். மற்ற நால்வரும் பின் தொடர்ந்து சென்றார்கள். குரவைக்கூத்துக்காக மேடையும், கொட்டகையும் போட்டிருந்த இடத்தை அடைந்ததும் கரிகாலன் நின்றான். "ஓகோ! இது என்ன? இங்கே என்ன நடக்கப் போகிறது?" என்று கேட்டான். "கோமகனே! தங்களுக்கு விருப்பமாயிருந்தால், இங்கே குரவைக்கூத்து வைக்கலாம் என்று உத்தேசம்". "ஆகா! ரொம்ப நல்லது! குரவைக்கூத்து வையுங்கள் வில்லுப்பாட்டு வையுங்கள். கரிகால் வளவர் நாடகம், விஜயாலயச் சோழர் நாடகம் எல்லாம் வையுங்கள். பகலெல்லாம் காட்டில் வேட்டையாடுவதில் கழிப்போம். இரவெல்லாம் பாட்டிலும், கூத்திலும் கழிப்போம். சம்புவரையரே! என் பாட்டன் மலையமான் எனக்கு என்ன சொல்லி அனுப்பினான், தெரியுமா! கடம்பூர் சம்புவரையன் மாளிகையில் இருக்கும் போது, 'இரவில் தூங்காதே!' என்று எச்சரிக்கை செய்தான். நான் என் பாட்டனுக்கு என்ன மறுமொழி சொன்னேன் தெரியுமா? 'பாட்டா! நான் பகலில் தூங்குவதில்லை. இரவிலும் தூங்குவதில்லை. நான் தூங்கி மூன்று வருடம் ஆகிறது. ஆகையால் நான் தூங்கும்போது விரோதிகள் எனக்கு ஏதேனும் தீங்கு செய்துவிடுவார்கள் என்று பயப்பட வேண்டாம். நான் விழித்துக் கொண்டிருக்கும் போதே யாராவது தீங்கு செய்தால் தான் செய்ய லாம். அவ்வளவு துணிச்சலுள்ள ஆண் மகன் யார் இருக்கிறான்?' என்று மலையமானுக்குத் தைரியம் சொல்லிவிட்டு வந்தேன்!" என்று கூறிவிட்டுக் கரிகாலன் சிரித்தான். சம்புவரையர் கோபத்தினால் நடுங்கிய குரலில், "ஐயா! தாங்கள் தூங்கினாலும் சரி, விழித்துக் கொண்டிருந்தாலும் சரி தங்களுக்கு எவனும் இந்த மாளிகையில் இருக்கும் போது தீங்கு செய்யத் துணிய மாட்டான்!" என்றார்.

"ஆம், ஆம்! கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குள் எனக்குத் தீங்கு செய்யக் கூடியவன் யார் இருக்க முடியும்? அல்லது வெளியிலிருந்து இவ்வளவு பெரிய மதில் சுவர்களைத் தாண்டி யார் வர முடியும்? யமன் கூட வர முடியாது. கடம்பூர் சம்புவரையர் என்றால் யமன் கூடப் பயப்படுவானே? அந்தத் திருக்கோவலூர்க் கிழவனாரின் வீண் கவலையைப்பற்றி உங்களுக்குச் சொன்னேன்.(தொடரும்...)

---



# சிறுவர் அரங்கம்

## முனியாண்டியின் மூளை



முனியாண்டி தைரியமாக சேட்டுவிடம் ஐயா, எங்கப்பா உங்களிடம் பதினைந்து வருடமாக வேலை செய்கிறார் என்று என்னிடம் சொல்லியிருக்கார். அப்படிப்பட்டவரை நீங்கள் சந்தேகப்படுகிறீங்களா?

சேட்டு அவனை பார்த்து தம்பி உங்க அப்பா மாதிரி மூன்று பேர் என்னிடம் பதினைந்து வருடமாக இருக்கிறார்கள். அவர்களுக்காகத் தான் நான் பொலிஸ் கேஸே கொடுக்கவில்லை. ஆனால் இந்தத் திருட்டை கண்டுக்காமல் விட்டால், மறுபடி மறுபடி நடந்து கொண்டே இருக்கும். அதனாலதான் ஒரு வாரம் டைம் கொடுத்திருக்கேன்.

நீ எத்தனையாவது படிக்கிறாய்? என்று அன்புடன் கேட்க, இவன் பணிவாக எல்லா பதில்களையும் சொன்னான். மறு நாள் நண்பன் ஆரோக் கியத்திடம் அவன் அப்பாவுடன் காவல் வேலைக்கு போனதையும், அப்பொழுது பங்களாவுக்கு போனதையும், சேட்டுவிடம் பேசியதையும் சொன்னான். அந்த பங்களாவில் இருந்த ரோசாப்பூ, மணம் பற்றியும் சொன்னான்.

நண்பன் இதென்ன பிரமாதம் என் வீட்டுலயும் செண்ட் பாட்டில் வச்சிருக்கேன், பார்கிறாயா? என்று சொன்னான். உனக்கு எப்படி கிடைத்தது? என்று ஆரோக்கியத்திடம் முனியாண்டி கேட்டான், நான் சொன்னேன் அல்லவா அந்த சேட்டு பங்களாவுல பாத்திரம் கழுவ போற அக்கா எனது அம்மாவிடம் கொடுத்து விட்டார். பங்களாவில் எல்லாருக்கும் சும்மாவே கொடுப்பார்களாம். வைத்துக் கொள்ளு என்று சொல்லி கொடுத்துவிட்டது. அப்படியா என்று வியப்புடன் கேட்டான் முனியாண்டி.

மாலை வீட்டுக்கு போனவுடன் அவன் அப்பாவிடம் இதைப்பற்றி பேசினான் பின் வேறு சில விடயங்களையும் தெரிந்து [illegible] தாக சொன்னான். வழக்கம்போல காத்த முத்து சேட்டுவிடம் இரவு பணிக்கு சேருவதற்கு முன்னர் அவரிடன் சொல்லிப்போக வந்தார். கூட முனியாண்டியும் இருப்பதைப் பார்த்த சேட்டு என்ன காத்தமுத்து படிக்கிற பையனை இராத்திரி இப்படிக் கூட்டி வரக் கூடாது, அப்புறம் படிப்பு கெட்டு விடும் என்று சொன்னார்.

முனியாண்டி ஐயா என்னை மன்னிக்கனும், நானாகத்தான் வந்தேன் உங்களுக்கு ஒரு விடயம் சொல்லணும் என்று பணிவாகச் சொல்லி விட்டு, உங்க வெள்ளி தட்டும், டம்ளரும் எங்க இருக்கும் என்று கண்டு பிடித்துவிட்டேன் ஆனால் நான் சொல்றமாதிரி நீங்க செய்தால் அதை சத்தமில் லாமல் கைப்பற்றிடலாம்.

சொன்னவனைக் கூர்ந்து பார்த்த சேட்டு, மேலே சொல்லு என்று தலையாட்ட இவன் தனது யோசனையை சொன்னான், இரண்டு நாட்கள் ஓடியிருந்தன. வெள்ளித் தட்டும், டம்ளரும் அந்த பாத்திரம் கழுவும் பெண்ணிடம் இருந்து கைப்பற்றப் பட்டு விட்டன. முனி யாண்டியின் யோசனைப் படி ஒருவன் வியாபாரியை போல் வேசமிட்டு அந்த பெண்ணிடம் மெல்ல பேச்சு கொடுத்து நல்ல விலை தருவதாக சொல்ல அவளும் சேட்டு வீட்டில் எடுத்து வந்த அந்த பொருட்களை இவனிடம் கொடுத்து பணம் கேட்டாள். அது மட்டுமல்ல, வேறு சில இடங்களில் இருந்து எடுத்து வந்திருந்த பொருட்களையும், விலைக்கு கொடுப்பதாக தெரிவித்தாள்.

அது போதுமே, சத்தமில்லாமல் பொலிஸுக்கு போவதாக சொல்லி எல்லா பொருட்களையும் மீட்டு விட்டனர். அவளிடம் இருந்து கைப்பற்றிய பொருட்களை அவரவர் இடத்திலும் சேர்ப்பித்து விட்டனர்.

முனியாண்டியின் மூளையை பாராட்டிய சேட்டு அவன் இறுதி வகுப்பு வரை படிக்கும் செலவை தான் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்து விட்டார். முனியாண்டியின் அம்மா கேட்டாள், எப்படிடா கண்டு பிடிச்சே? அப்பா இதுவரைக்கும் எந்த செண்ட் பாட்டி லும் வீட்டுக்கு கொண்டு வந்ததில்லை. பங்களாவுல இந்த மாதிரி எந்த பொருளும் சும்மா கொடுக்கறாங்க என்று நம்மிடம் இது வரைக்கும் சொன்னதும் இல்லை. அதனால் தான். (முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நான் எனது மாணவர்களுக்கு ஒருபோதும் கற்பிப்பதில்லை. அவர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய சூழ் நிலைகளை மட்டுமே வழங்க முயற்சிக்கின்றேன். - ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## தர்மரதன தேரரின் இனவாத விதைப்பு

தமிழர் பகுதியான வடக்குக் கிழக்கு மாகாணங்களை இந்தியா தனது மாநிலமாக ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதென பேராசிரியர் தர்மரதன தேரர் கூறியுள்ளார்.

இவ்வாறு கூறுவதன் மூலம் பேராசிரியர் தர்மரதன தேரர் எதைச் சாதிக்க முற்படுகிறார் என்று கேட்கும்போதுதான் உண்மை தெரிய வரும்.

ஆம், இனவாதமற்ற நாட்டை உருவாக்க வேண்டும் என்பது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கொள்கையாக உள்ளது.

இலங்கைத் திருநாட்டில் இருந்து இனவாதம் களையப்பட்டால், நாட்டில் சிங்கள - தமிழ் - முஸ்லிம் என்ற இனப் பாகுபாட்டுக்கு இடமிருக்க மாட்டாது.

மாறாக, அனைவரும் இலங்கையர்கள் என்ற நிலைமை ஏற்படும் என்பதே தேசிய மக்கள் சக்தியின் கொள்கையாகவுள்ளது.

எனினும் அதனைக்கூட எதிர்க்க வேண்டும் என்பதில் சிங்களப் பேரினவாதிகள் உறுதியாக உள்ளனர்.

ஆம், காலசூழ்நிலைகளும் புதிய ஆட்சி மாற்றமும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களும் சேர்ந்து இலங்கையில் இனவாதத்தை இல்லாது செய்து விடுமோ என்ற ஏக்கம் பேரினவாதிகள் மத்தியில் உருவெடுத்துள்ளது.

தவிர, ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுபவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதிலும் பேரினவாதிகள் உறுதியாக உள்ளனர்.

இந்நிலையில், மீண்டும் புலிகள் உருவாகுவர் என்று பேரினவாதிகள் வழமையாகக் கூறுவதை இனி சிங்கள மக்கள் ஏற்கமாட்டார்கள்.

எனவே, புதிதாக பேரினவாதத் தீயை மூட்ட வேண்டும் என்ற அடிப்படையிலேயே பேராசிரியர் தர்மரதன தேரர்; தமிழர் பகுதிகளான வடக்குக் கிழக்கை இந்தியா தனது மாநிலமாக ஆக்குவதற்கு முயற்சி செய்கிறது என்ற கதையை அவிழ்த்துவிட்டுள்ளார்.

இவ்வாறு கூறுவதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து அறுவடை செய்ய முடியும் என்பது பிரஸ்தாபத் தேரர் உள்ளிட்ட சிங்களப் பேரினவாதிகளின் நிலைப்பாடாக உள்ளது.

இங்குதான் ஆட்சித் தரப்பு மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஏனெனில் வடக்குக் கிழக்கை இந்தியா தனது மாநிலமாக ஆக்க முயற்சிக்கிறது என்ற பிரசாரம் தென்னிலங்கையில் சூடுபிடிக்குமாயின், மீண்டும் இனவாத நோய் சிங்கள மக்களைப் பீடிக்கவே செய்யும்.

ஆகவே இது விடயத்தில் முன்கூட்டியே தெளிவுபடுத்தல்களை அரசாங்கம் செய்தாக வேண்டும்.

# தேர்தல் வாக்குறுதிகள் ஒவ்வொன்றாக மீறப்படுகின்றன

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒவ்வொன்றாக அநுர அரசாங்கம் மீறி வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகங்களிடம்நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேர்தல் காலப் பகுதியில் நாட்டு மக்களுக்கு வழங்கிய பல வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் மீறியுள்ளது என்பது விசேட கணக்கெடுப்பின் ஊடாக தெரியவந்துள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கை வலுப்படுத்துவோம் என இந்த அரசாங்கம் தெளிவான வாக்குறுதியை வழங்கியிருந்தது. நாட்டு மக்களினது வாழும் உரிமையைப் பாதுகாப்பது நாட்டின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்று என்று பொதுமக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும், இன்றளவில், முறையான பொதுமக்கள் பாதுகாப்பை வழங்க முடியாததொரு அரசாங்கமாகவே காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் காட்டுச் சட்டமே தற்போது நடைமுறையில் காணப்படுகின்றது. நாட்டில் சட்டத்தின் ஆட்சி முற்றிலுமாக அழிக்கப்பட்டு, 67 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஊடாக 37 உயிர்கள் பலியாகியுள்ளன. தேசியப் பாதுகாப்பு குறித்து ரியூசன் வகுப்புக்களை எடுப்போம் என ஆளும் தரப்பினர் தேர்தல் மேடைகளில் மக்கள் மத்தியில் வீராப்புடன் பிரஸ்தாபித்தனர். ஆனால் இன்று தேசிய பாதுகாப்பும், பொதுமக்கள் பாதுகாப்பும் முற்றிலுமாக இல்லாது போயுள்ளன.

மக்களின் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எந்நேரத்தில், எந்தக் கட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு உயிர்கள் பறிபோகும் என்ற பிரச்சினை எழுந்துள்ளது. சட்டம் ஒழுங்கு மீதான தற்போதைய அடி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும். ஆனபடியால் இதை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்தப் பொறுப்பிலிருந்து அரசாங்கம் தப்பித்துவிட முடியாது. ஒட்டுமொத்த பொதுமக்களும் இந்த தேசிய பாதுகாப்புப் பிரச்சினைக்கு தீர்வை எதிர்பார்த்து நிற்பதால் அரசாங்கம் இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்க முடியாது. இந்தக் கொலை கலாசாரத்தைக் கட்டுப்படுத்த வலுவான சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவ்வாறு உரிய நடவடிக்கை எடுக்காத விடத்து மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். இது அரசாங்கத்தின் தோல்வியை காட்டி நிற்கிறது எனத் தெரிவித்தார். (ம-7)

# காணி தொடர்பான பிணக்குகள் வடக்கு மாகாணத்தில் அதிகம்

## கனேடியத் தூதுவரிடம் வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

காணி தொடர்பான பிணக்குகள் வடக்கு மாகாணத்தில் அதிகமாக காணப்படுகின்றன என இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடம் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

இச்சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தில் காணி தொடர்பான பிணக்குகள் அதிகளவில் உள்ளமையை சுட்டிக் காட்டிய ஆளுநர், போர் காரணமாக ஆவணங்கள் அழிவடைந்தமை இதற்குப் பிரதான காரணமாக உள்ளதாகத் தெரிவித்தார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன கடந்த காலங்களில் இங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரியாமல் கூகுள் வரைபடத்தின் உதவியுடன் காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்தமையால் எழுந்துள்ள சவால்களை ஆளுநர் எடுத்துக் கூறினார். இதற்குத் தற்போதைய அரசாங்கம் தீர்வு காண்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் ஆளுநர், கனேடியத் தூதுவருக்கு விபரித்தார். இந்தத் திணைக்களங்களால் வடக்கு மாகாணம் மாத்திரமல்ல ஏனைய பிரதேசங்களிலும் பாதிப்புக்கள் உள்ளதாக தாம் அறிந்திருப்பதாகக் கனேடியத் தூதுவர் பதிலளித்தார்.

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் உள்ளமையால் மக்கள் இன்னமும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் எனச் சுட்டிக் காட்டிய ஆளுநர், அந்த மக்கள் அதனை முழுமைப் படுத்துவதற்கு உதவிகள் தேவை எனக் கோரிக்கை விடுத்தார்.

அதேபோல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றன என்றும் அவர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புக் களை உருவாக்கிக் கொடுப்பதற்கான உதவிகள் தேவை எனவும் ஆளுநர் கோரினார். (ம-7)

# பயங்கரவாதச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து

## திருகோணமலையில் கையெழுத்துப் போராட்டம்

(திருகோணமலை)

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலையில் நேற்று நேற்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை குறித்த கையெழுத்திடும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்னுமொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய், காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதாவது நீதி வழங்கு,

அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமைகளை உறுதி செய்யும் புதிய அரசியலமைப்புக்காய் போராடுவோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து எதிர்ப் பதாகையில் கையெழுத்திடும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் கையெழுத்து போராட்டத்தில் அதிகளவான பொதுமக்கள் ஆர்வத்துடன் கையெழுத்துக்களை இட்டதையும் காணமுடிந்தது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வோம்



## அமரர் கணேஷராஜா இராஜேந்திரகுமார் (ராஜன்)

(முன்னாள் உதவி இலங்கைக்கான பணிப்பாளர் UNDP, இணைப்பாளர் SLIDA

தோற்றம் 03.08.1963

மறைவு 12.07.2025

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட **கணேஷராஜா இராஜேந்திரகுமார் (ராஜன்)** இறைவனடி சேர்ந்தார் என்கின்ற துயர் செய்தியை பகிர்ந்து கொள்கின்றோம். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கணேஷராஜா, செல்வராணி கணேஷராஜாவின் மகனும் சிவமலரின் அன்புக் கணவரும் கணேஷமயூரனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி செல்வ லஷ்மியின் தம்பியும் உஷா - இராஜமனோகரியின் (அமெரிக்கா) அண்ணனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது கொழும்பு இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை 15.07.2025 காலை 9.00 மணி முதல் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நடைபெற்று பொரல்ல இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

71/9, SARANS PLACE Colombo - 07,
TEL - 077 607 5600

(4805)

தகவல்
பாடசாலை நண்பர்


## சொத்து விபரங்களை அறிவிக்காவிட்டால் அபராதம்

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அரச ஊழியர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்து அறிவிப்புகளை சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளிடமிருந்து அபராதம் அறவிடப்படவுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த அறிவிப்புகளை ஏராளமானோர் சமர்ப்பிக்க உள்ளதாகவும், இன்றைய தினத்திற்கு பிறகு அறிவிப்புகளை சமர்ப்பிக்கும் அரச அதிகாரிகளிடமிருந்து அபராதம் அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளின் ஊதியத்திலிருந்து இன்று முதல் தாமதமான நாட்களுக்கான அபராதம் அறவிடப்படும்.

மேலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்து அறிவிப்புகளை இன்னும் சமர்ப்பிக்காத அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை நிறுவனத் தலைவர்கள் எதிர்வரும் நாட்களில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. (ம-7)


# INVITATION FOR BID 2025/02
## Zonal Education Office, Jaffna

1. The **Chairman, Regional Procurement Committee**, on behalf of the Zonal Director of of Education, Zonal Education Office, Jaffna, Chemmani Road, Nallur, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Repairs works described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. when the estimated cost exceeds Rs 5.0 million**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **from 15/07/2025 to 29/07/2025** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Zonal Director of Education, Zonal Education Office, Jaffna. Chemmani Road, Nallur, Jaffna (T.P: 021-222 2647 / 021 222 2449, Fax: 021 222 2449) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, **Regional Procurement Committee Zonal Education Office, Jaffna. Chemmani Road, Nallur, Jaffna on or before 10.30 a.m as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Zonal Education Office, Jaffna. Chemmani Road, Nallur, Jaffna** commencing at **10.30 A.M as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft/ Institutions are acceptable as per the information given in the Tables.


| | Document Issuing/Purchasing Period | | | | From 15/07/2025 to 29/07/2025 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | At 10.30 A.M on 2025-07-23 | | | | |
| | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 30/07/2025 | | | | |
| Bid ID | Description of Work | Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| GROUP A | | | | | | | | | |
| NP/41/20/1/3/PSDG /2025/04 | Major Repair of Assembly Hall & Toilet at. J/Kopay Christian College | PSDG | 6.78 | 90 | C8 or above (Buildings) | 3,000.00 | 68,000.00 | 12.11.2025 | 15.10.2025 |
| NP/41/20/1/3/PSDG /2025/05 | Major Repair of Classroom at J/Columbuthurai St.Joseph vid | PSDG | 4.58 | 90 | C8 or above (Buildings) | 3,000.00 | 46,000.00 | 12.11.2025 | 15.10.2025 |
| NP/41/20/1/3/MRC/ 2025/01 | Major Repair's to Prayer Hall at J/ St Therasa Girls College | MRC | 2.75 | 30 | C9 or above (Buildings) | 2,000.00 | 27,500.00 | 12.11.2025 | 15.10.2025 |

Chairman
Reginal Procurement Committee,
Zonal Education Office, Jaffna.
Chemmani Road, Nallur,
Jaffna.



# மரண அறிவித்தல்

## நடராசா சிவபாலகணேசன்
(தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வு பெற்ற பிரதிப் பொது முகாமையாளர்)



பிறப்பு 08.01.1945

இறப்பு 14.07.2025

மகாதனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நடராசா சிவபாலகணேசன் அவர்கள் நேற்று (14.07.2025) திங்கட்கிழமை அதிகாலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான காசியர் - சீவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் யாஹறரன் (தவத்திரு வேலன் சுவாமிகள்), யாழினீஸ்வரி (அவுஸ்திரேலியா), சிவவல்லி, தங்காகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் துஷ்யந்தன், சாரங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலாந்தன், தக்ஷிகா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் அமரர் அம்பிகாபதியம்பாள், பூரணம், பரமேஸ்வரி, அமரர் செல்வநாயகம், அமரர் பாலகணேசன், மங்கையற்கரசி ஆகியோரின் அருமைச் சகோதரனும் அமரர் விக்கினேஸ்வரன், ஜீவதாசன் (சுவிஸ்), அமரர் முதலித்தம்பி, அமரர் கந்தசாமி, அமரர் சோமசுந்தரம், அமரர் யுவதி, பத்மாவதி, சுரேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2025) புதன்கிழமை பகல் ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(8408)

தகவல் : குடும்பத்தினர்
077 507 7432


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்லைன் ஊடாக...

ஹர்ஷ புரசிங்க தெரிவித்தார்.

அபராதம் செலுத்துவது தொடர்பாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-7)

## கம்பஹாவில்...

யில் உள்ள துரியன் தோட்டமொன்றில் அத்துமீறி நுழைந்த நபர் ஒருவர் மீது தோட்டத்தின் காவலாளி துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளார்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் மீரிகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட காவலாளி மற்றும் சம்பவத்தின் பின்னணி குறித்து பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (ம-7)

## முதல் முறையாக...

சேர்ந்த நிர்வாக சேவை அதிகாரியான சுபாஜினி மதியழகன் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமைகளை நேற்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்.சங்கானை பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய சுபாஜினி நிர்வாக சேவை சிறப்புத் தரத்துக்கு பதவி உயர்வு பெற்ற நிலையில் வடமத்திய மாகாண சபைக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார்.

வட மத்திய மாகாண சபையின் முதல் தமிழ்ப் பெண் செயலாளர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். (ம-7)

## வடக்கில் படை...

உரிமையாளர்கள் மற்றும் வடக்கு மாகாணத்தில் படையினர் வசம் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுக்க நேற்று கொழும்புக்குப் பயணமாகியுள்ளனர்.

மன்னாரில் செயற்படும் ஒரு தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்புக்குப் பயணிக்கும் அவர்கள், தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை, வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளின் உரிமையாளர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.(ம-7)

## நடைபாதை...

ஏற்பட்டன.

இலுப்பையடி மற்றும் வைத்தியசாலை சுற்றுவட்ட வீதிகளில் பல ஆண்டுகளாக வியாபாரம் செய்து வந்த நடைபாதை வியாபாரிகளை அகற்றும் செயற்பாடு நேற்று திங்கட்கிழமை (14) வவுனியா மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர முதல்வர் சு.காண்டீபன் இதுகுறித்து தெரிவிக்கையில், போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நடமாட்டத்துக்கு இடையூறாக இந்தக் கடைகள் இருந்ததால், அவற்றை அகற்றும் முடிவை மாநகர சபை எடுத்ததாகக் கூறினார்.

இதற்கு முந்தையதான கவனயீர்ப்புப் போராட்டத்தின்போது, மாநகர சபை உறுப்பினர்கள், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து கடைகளை அகற்றத் தொடங்கினர். இதனால் வியாபாரிகள் மற்றும் அதிகாரிகளுக்கிடையே முரண்பாடுகள் மற்றும் தள்ளுமுள்ளு நிலைகள் உருவாயின.

வியாபாரிகள் தமக்கான மேலும் கால அவகாசம் வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கையொன்றை முன்வைத்தனர். ஆனால் மாநகர முதல்வர், ஏற்கெனவே ஏப்ரல் மாதத்தோடு கடைகள் அகற்றப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தாலும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததால், இனி கால அவகாசம் வழங்க முடியாது என உறுதியுடன் தெரிவித்தார்.

இதேநேரம், வன்முறைத் திருப்பங்களை தவிர்க்க, பொலிஸாரும் தலையிட்டு வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன் பிறகு, வியாபாரிகள் உடன்பாட்டுக்கு வந்து, வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கொட்டகைகளை அகற்றினர்.(ம-7)

## மயிலிட்டி...

இதில் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் (வயது-54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மனைவி, பிள்ளைகள் பிரான்ஸில் வசித்து வரும் நிலையில் மூன்று மாதத்திற்கு முன்னர் இலங்கை திரும்பிய அவர் மயிலிட்டியில் தங்கியிருந்தபோது படுக்கையில் உயிரிழந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை (14) சடலமாகக் காணப்பட்டார்.

சடலம் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## சாவ...

இருந்து நேற்று திங்கட் கிழமை பிற்பகல் வெடிபொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

காணித் துப்புரவுப் பணியின்போது மேற்படி வெடிபொருள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் மேற்படி வெடிபொருளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (ம-7,30)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

விற்பனையாளர் தேவை
தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ். முகவரான கனகலிங்கம் திலகவதி லொத்தர் விற்பனைக்கூடுகளுக்கு விற்பனையாளர் தேவை.
தேவையான இடங்கள்:-
நல்லூர் கிளிகடைச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (மடத்தடிச் சந்தி)
தொடர்புகளுக்கு:-
077 603 1723, 077 213 3460
(4807)

மஹஜன சம்பத
திகதி 2025.07.14
சீட்டிழுப்பு இலக்கம் 5890
Y 5 7 0 0 0 0
அத சம்பத
Y 0 0 0 0
சீட்டிழுப்பு இலக்கம் 0465
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.07.14
சீட்டிழுப்பு இலக்கம் 0006
மிதுனம் 15 36 47 49

தன நிதானய
திகதி - 2025.07.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1920
Z 36 39 71 76 Z
Double Chance 57492

மெகா பவர்
திகதி 14/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2238
H 24 33 46 62 72

ஜய
திகதி 2025.07.14
சீட்டிழுப்பு இலக்கம் 0158
D 7 1 7 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4132
சீட்டிழுப்பு திகதி 14.07.2025
D 23 42 45 69
D

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.14
சீட்டிழுப்பு இலக்கம் 1199
தனுசு 13 43 46 53 தனுசு
52415 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.07.2025 வெற்றி வாரம் 0598
D 3 8 6 6 7 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,393,208.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2864
சீட்டிழுப்பு திகதி 2025.07.14 தினம் திங்கட்கிழமை
18 45 54 69 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,247,300.00

சனிதா
திகதி 14.07.2025 வெற்றி வாரம் 5025
01 07 16 43 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,394,987.60
ரூ. 50,000/- பணப்பரிசு

ஜயோதா
திகதி 2025.07.14 வெற்றி வாரம் 2143
21 38 41 54 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,427,026.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4576
சீட்டிழுப்பு திகதி 14.07.2025 தினம் திங்கட்கிழமை
04 26 39 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,855,392.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 18 04 09 17 75
2040
14.07.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.582,417,892.20

அத கோடிபதி
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2690
சீட்டிழுப்பு திகதி: 2025.07.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,919,158.40
03 11 25 70 V


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில்
ஆசிரியராகக் கடமையாற்றி
இலங்கை ஆசிரியர்
கல்வியியலாளர் சேவைக்கு
தெரிவு செய்யப்பட்ட

**திரு.செல்வநாயகம் சிவபாலசுந்தர்**

அவர்கள் வவுனியா தேசிய
கல்வியியற் கல்லூரியில் உடற்கல்வி
விரிவுரையாளராகக் கடமைகளைப்
பொறுப்பேற்றுள்ளார்.
இவரை நாம் பாராட்டி
மேலும் பல உயர்வுகள்
பெற வாழ்த்துகின்றோம்.

Best Wishes

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3415)

076 825 7716 (ஆகாஸ்)

---

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

---

## வேலைவாய்ப்பு

விற்பனை முகாமையாளர் (Basic - 90 000/=)
உதவி விற்பனை முகாமையாளர் (Basic - 60 000/=)
ஒன்லைன், பகுதி நேர வேலைவாய்ப்புகளும் உண்டு
அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: 077 996 9661 (4806)

---

# Savings ஐ
# வேறு விதத்தில் பார்ப்போம்

போடப் போட அதிகரிக்கும் வட்டி
LOLC SUPER SAVINGS

+ ஆக்கியதை இப்பொழுது
× ஆக்குவோம்

7%* வரை அதிக வட்டி (7.23%) வ.வ.வீ

ஆரம்ப வைப்பு ரூ.15,000

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

விசாரணைகளுக்கு 0115 715 555

புதுப்பிக்கப்பட்ட கட்டணங்களுக்கு, QR குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்

LOLC SUPER SAVINGS

LOLC FINANCE (C-207)

பரிந்துரைகள் மற்றும் முறைப்பாடுகள்

www.lolcfinance.com

*வட்டி விகிதங்கள் மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கமைய மாறுபடலாம்

2001 டிசம்பர் 13 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட LOLC ஃபினான்ஸ் PLC, 2011 இல 42 எனும் நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற Lanka Rating நிறுவனத்தின் A (Positive) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது (2025). இலங்கை வைப்புகள் காப்புறுதிப் பிரேரணை கீழ் தகைமை பெற்ற வைப்புகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதால் ஒரு வைப்பாளருக்கு 1,100,000 வரை உயர் நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

---

## தேவை

TASTRAA நிறுவன உற்பத்திகளை
விற்பனை செய்து தரக்கூடிய
விற்பனையாளர்கள் தேவை.
(கடை நடத்துவோர் தேவை)
விசேட லாப வீதம் வழங்கப்படும்
சுன்னாகம், மருதனார்மடம் (1328)

076 440 0816

---

## கனடா - வரி இல்லாமல்
## விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2200/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- | Australia 11Kg - 2130/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237

---

## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை (C-3416)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

---

## புதிய பிரிவுகள் ஆரம்பம்
## 19.07.2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat (SriLanka)
(AA1, AA2, AA3)
Qualification:- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

✧ A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களில் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II
Qualification:- G.C.E A/L 3 Passes(Medium - Tamil & English)

Further Details:- Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382
0774405917 (C-3380)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org